செ.வெ.எண்: 57 நாள்:30.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் 03-08-2021 மற்றும் 04-08-2021 முடிய ஆகிய இரண்டு நாட்களுக்கு குடிநீர் நிறுத்தம்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 893 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் பிரதான நீரேற்றும் குழாய் செல்லும் பாதையினை மாற்றியமைக்கும் பணி NH 45C-ன் சாலை விரிவாக்கம் பணி நடைபெறவுள்ளதால் எதிர்வரும் 03-08-2021 முதல் 04-08-2021 ஆகிய இரண்டு நாட்களுக்கு கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு, நாகப்பட்டினம், திருமருகல் ஆகிய ஒன்றிய பகுதிகளுக்கும், நாகப்பட்டினம் நகராட்சி, வேளாங்கண்ணி பேரூராட்சி மற்றும் கீழ்வேளுர் பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட உள்ளதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பராமரிப்புக்கோட்ட நிர்வாகப்பொறியாளர் திரு. ச. கருணாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**